**செய்தி வெளியீடு எண்: 253** **நாள் : 01.06.2016**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (01.06.2016) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (சிட்கோ) ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சிட்கோ ஓர் அறிமுகம், சிட்கோவின் செயல்பாடுகள், சிட்கோவின் பணியாளர் கட்டமைப்பு, சிட்கோ கிளை அலுவலகங்கள், தொழிற்பேட்டை கட்டமைப்புகள், மூலப்பொருட்கள் விநியோகத் திட்டம், புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கம் (2011–2016), உருவாக்கப்படவுள்ள புதிய தொழிற்பேட்டைகள் (2011–2016), உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் (2011–16), மூலப்பொருட்கள் விநியோகம், நிதி செயல்பாடுகள், பொது வசதி மையம் (MSE-CDP திட்டம்), புதிய தொழிற்பேட்டைகள் உருவாக்கம் (MSE-CDP திட்டம்), தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல் (MSE-CDP திட்டம்), தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல் (பகுதி–2 திட்டம்), விற்பனை உதவி திட்டம், சிட்கோ தொடர்பான அறிவிப்புகளின் நிலை, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் 5 ஆண்டுகால விதி 110ன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் தற்போதைய நிலை, மாவட்ட ஆட்சியாளர்களின் கூட்டம் 2011–12–ல் எடுக்கப்பட்ட முடிவின்படி தனியார் தொழிற்பேட்டை சம்பந்தமான முன்னேற்றம், தனியார் தொழிற்பேட்டைகளின் தற்போதைய நிலை, 2011–2016ல் எய்திய சாதனைகள், மற்றும் புது முயற்சிகள், 2016–17ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தார்கள்.

முன்னதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வேலூர் மாவட்டம் முகுந்தராயபுரம் தொழிற்பேட்டையில் நீண்ட காலமாக விற்பனை பத்திரம் வழங்கப்படாமல் இருந்த தொழில் முனைவோர்களுக்கு விற்பனை பத்திரங்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில் முனைவர் திரு ஜக்மோகன்சிங் ராஜு இஆப, கூடுதல் தலைமைச் செயலாளர், குறு, சிறு (ம) நடுத்தர தொழில் துறை, தலைவர் (ம) நிர்வாக இயக்குநர், சிட்கோ, திரு. கே. பாலசுப்பிரமணியம், பொது மேலாளர் (நிர்வாகம்), திருமதி என். லீலாவதி, பொது மேலாளர் (நிதி) மற்றும் இதர சிட்கோ அதிகாரிகள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**